பக்கங்கள் 4 விலை: ரூபா 2-00

விடுதலை

இதழ்: 78 திங்கட்கிழமை 25-12-1989

பத்து ஆண்டுகளில் சிறந்த மனிதர்

(நியுயோர்க்)

கடந்த 10 ஆண்டுகளில் சிறந்த மனிதராக சோவியத் அதிபர் மிகையில் கொர்ப்பச்சேவ் அவர்களை அமெரிக்க வார இதழான "டைம்ஸ்" பத்திரிகை தேர்ந்தெடுத்துள்ளது. அணு ஆயுத அபாயத்திலிருந்து, மக்களைக் காப்பாற்றவும், உலக சமாதானத்திற்காகவும் நீண்ட காலமாகக் குரல் கொடுத்து வந்த அதிபர் கொர்ப்பச்சேவ் 1980 முதல், சிறப்பான நிகழ்ச்சிகளுக்குக் காரணமானவர் என்றும் அப்பத்திரிகை கூறுகின்றது.

இந்த ஆண்டு சிறப்பு மனிதர் என்ற தெரிவையும் அவர் மிஞ்சி, கடந்த 10 ஆண்டுகளில் சிறந்த மனிதராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் எனவும் "டைம்ஸ்" பத்திரிகை தெரிவித்துள்ளது.

டிசம்பருக்குள் படை வாபஸ் இல்லை

இலங்கைக்கு இந்தியா பதிலளிக்கும்

(புதுடெல்லி)

இந்திய அமைதிப்படை வாபஸ் குறித்து இலங்கை அரசு வெளியிட்டு வரும் கருத்துக்களுக்கு இந்தியா அடுத்த சில தினங்களில் பதில் அளிக்கும் என்று தெரிகிறது. இலங்கைக்கான பதில் குறித்து இந்திய அரசின் உயர் அதிகார மட்டத்தில் ஆலோசனை நடந்து வருகிறது.

கடந்த செப்டெம்பர் 18-ல் வெளியிடப்பட்ட இலங்கை – இந்திய கூட்டறிக்கையின்படி, இம்மாதம் 31ந் திகதிக்குள் அமைதிப்படை விலகல் முடிவடைந்துவிடவேண்டும் என்று இலங்கை அரசு கூறிவருவது குறித்து, இந்தியா தனது நிலையை அந்தப் பதிலில் தெளிவுபடுத்தும் என்று தெரிகிறது.

இலங்கை ஜனாதிபதி பிரேமதாசாவை திருப்திப் படுத்துவதற்காக, அவர் கேட்டுக் கொண்டதற்கிணங்க 'இந்த ஆண்டு இறுதிக்குள் இந்தியா தனது படைகளை விலக்கிக் கொள்ள அனைத்து முயற்சிகளையும் எடுக்கும்' என்றஅந்த வாசகம் கூட்டறிக்கையில் சேர்க்கப்பட்டது. படை விலகலுக்கான காலக்கெடு எதனையும் இந்தியா ஏற்கவில்லை என்பதனையும், அமைச்சர் ரஞ்சனின் குட்டையைக் குழப்பும் நடவடிக்கைகளுக்கு இந்தியாவின் அதிருப்தியையும் அந்தப் பதிலில் காண்பிக்கும்

(4ம் பக்கம் பார்க்க)

ஆட்கடத்தலும் கப்பமும் மீண்டும் அதிகரிப்பு!

(திருகோணமலை)

இந்திய அமைதிப்படை முற்றிலுமாகவெளியேறிய மாவட்டங்களான அம்பாறை, மட்டக்களப்பு, மன்னார், முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் ஆட்கடத்தலும், கப்ப வசூலிப்பும் மீண்டும் அதிகரித்திருப்பதாக இங்கு கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆயுதந் தாங்கிய தமிழ் இளைஞர்களோடு சேர்ந்து சிறீலங்கா இராணுவமும், விசேட அதிரடிப் படையினரும் இப்பகுதிகளில் கப்பம் அறவிடும்

(4ம் பக்கம் பார்க்க)

வான் மோதி சிறுவன் மரணம்

(வவுனியா)

வவுனியா – யாழ்ப்பாணம் வீதியில் தகப்பனும், மகனும் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த வேளையில், பின்புறமாகச் சென்ற வான் மோதியதில், அவரது ஏழு வயதுச் சிறுவன் ஸ்தலத்திலேயே இறந்தான். இறந்த சிறுவன் இரணைமடுக் குளத்தடியைச் சேர்ந்த ஆறுமுகம் ஆனந்தகுமாராகும். இவருக்கு தற்போது ஏழுவயதாகும்.

வானின் சாரதி பொலீசாரால் அனுராதபுரம் நீதவான் முன் ஆஜர் செய்யப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பில் புலிகளுக்கு பெரும் சேதம் ஆயுதமுனையில் மருத்துவர்கள் கடத்தல்

(மட்டக்களப்பு)

கடந்த வெள்ளியன்று காலை 5-30 மணியளவில் மட்டக்களப்பில் உன்னிச்கை காட்டுப் பகுதியில் தமிழ் தேசிய இராணுவத்தினருக்கும் புலிகளுக்கும் இடையே கடும் மோதல் ஏற்பட்டது. புலிகளின் தரப்பில் ஏராளமான இழப்புகள் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இறந்த புலிகள் 11 பேரின் சடலங்களை தமிழ் தேசிய இராணுவத்தினர் எரித்துள்ளனர். ஏனைய சடலங்களைத் தூக்கிக் கொண்டு தப்பியோடி விட்டதாகத் தெரிகிறது.

தாக்குதல்களில் ஏராளமாகக் காயம் பட்டிருக்கும் புலி இயக்கத்தவர்களுக்கு

(4ம் பக்கம் பார்க்க)

"இலங்கையின் வரலாற்றில் இருள் சூழ்ந்த காலகட்டம்"

—தமிழ் தேசிய சபை அறிக்கை

(திருகோணமலை)

"இங்கு திரு. ரணசிங்க பிரேமதாசா ஜனாதிபதியாக ஆண்ட கடந்த ஒரு வருட காலம் இலங்கையின் வரலாற்றிலே மிகவும் இருள் சூழ்ந்த காலகட்டமாகும்" என்று தமிழ் தேசிய சபை நேற்று திருகோணமலையில் வெளியிட்ட ஒரு பத்திரிகை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

இந்த ஆண்டு, உலகிலேயே மிக மோசமாக மனித உயிர்களைப் பலியெடுத்த நாடுகளில்

(4ம் பக்கம் பார்க்க)

நத்தார் வாழ்த்துகள்

எமது நத்தார் வாழ்த்துக்களை விடுதலை வாசகர்களுக்குத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

— நிர்வாகிகள்

புகையிரதப் பிரயாணிகளிடம் கொள்ளை!

(வவுனியா)

புகையிரதப் பிரயாணிகளின் நகைகள் கொள்ளையிடப்பட்டது.

தலைமன்னாரிலிருந்து அனுராதபுரம் நோக்கிச் சென்று கொண்டிருந்த பயணிகள் புகையிரதத்தை ஆயுதம் தாங்கிய ஒரு குழுவினர் செட்டிகுளத்திற்கு அருகாமையில் வைத்துக் கொள்ளையடித்

(4ம் பக்கம் பார்க்க)

ஸ்ரீலங்கா ஹெலியில் 23 துவாரங்கள்

இரத்மலானையில் பழுதுபார்ப்பு!

(கொழும்பு)

விமானப் படையின் ஹெலிகோப்டர் ஒன்று இந்தியர்களினால் சுட்டுவீழ்த்தப்பட்டது என்னும் தலைப்பில் இன்றைய 'ஐலண்ட் பத்திரிகையில்' வெளியான செய்தி தவறானதாகும். இது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சிலுள்ள செயல்பாட்டுத் தலைமை அலுவலகம் இந்தப்பத்திரிகைச் செய்தி பிழையானது எனச் சுட்டிக் காட்டியுள்ளது.

மேற்படி அலுவலகத்தின் அறிக்கையிலபடி இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான ஒரு ஹெலிகொப்டர் செட்டிகுளத்திலுள்ள இலங்கை இராணுவ முகாமுக்கு உணவுப் பொருட்களைக் கொண்டுசெல்வதற்காக கடந்த வெள்ளிக்கிழமை மாலை புறப்பட்டது.

இக்ஹெலிகொப்டர் செட்டிகுளத்தில் இறங்குவதற்கு தயாராகிக்கொண்டிருந்த சமயம், ஹெலிகொப்டரை நோக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. இதனால் அங்கு தரையிறங்காமல் வவுனியாவுக்குத் திரும்பியது. அங்கு ஹெலிகொப்டரைப் பரிசோதனை செய்தபோது அதன் எரிபொருள் தாங்கியில் 23 துப்பாக்கிச் சூட்டுத்துவாரங்கள் காணப்பட்டன.

தற்போது இரத்மலானை விமான நிலையத்தில் பழுது பார்க்கப்படுவதாகவும் தெரிய வருகிறது.

இதே நேரம் ஹெலிகொப்டரில் இருந்த எவரும் பாதிக்கப்படவில்லையென்றும், அது

இதில் பிரயாணம் செய்த பல ஸ்ரீலங்கா இராணுவச் சிப்பாய்கள் காயமடைந்துள்ளதாகவும் பிறிதொரு செய்தி தெரிவிக்கின்றன.

விடுதலை விரும்பும் மக்களின் ஒரே நாளிதழ் 'விடுதலை'

தமிழ்பேசும் மக்களை பாதுகாக்க

"இலங்கை அரசு உறுதியான நடவடிக்கை எடுக்கவில்லை"

(கொழும்பு)

வடக்குகிழக்கிலுள்ள தமிழ் பேசும் மக்களின் பாதுகாப்பை இலங்கை அரசாங்கம் உறுதிப்படுத்துவதற்கு இதுவரை எத்தகைய ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் எடுக்காததாலேயே திருகோணமலை யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளிலிருந்து இந்திய அமைதிப்படையினரை இம்மாத இறுதிக்குள் திருப்பி அழைப்பதில் தாமதம் ஏற்பட்டிருப்பதாக இந்தியாவின் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

இந்திய அமைதிப்படையினர் முன்னர் கூறியவாறு அம்பாறை, மட்டக்களப்பு, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய பகுதிகளிலிருந்து முழுமையாகவே வெளியேறியுள்ளனர் இப்பகுதிகளில் அமைதியற்ற சூழ்நிலை காணப்படுவதும், பெருமளவில் மக்கள் மீண்டும் அகதிகளாக இந்தியாவுக்குச் செல்வதும் மீண்டும் இப்பிரச்சினையில் புதிய சூழ்நிலையை ஏற்படுத்திவிட்டது.

இந்திய அமைதிப்படையினர் இலங்கையை விட்டு வெளியேறும் பட்சத்தில் இலங்கை அரசாங்கத்தின் தரப்பில் பின்வரும் உறுதிமொழிகள் அளிக்கப்பட்டிருந்தது.

O மாகாண பொலிஸ் படைகளை உருவாக்குதல்.

O அரசியலமைப்பின் பதின்மூன்றாவது திருத்தத்தின் கீழ் அதிகாரங்களை வழங்குதல்.

O மக்கள் தொண்டர் படையினரைப் பலப்படுத்துதல்.

O வடக்குக் கிழக்கிலுள்ள தமிழர்களுக்கு பாதுகாப்பு வழங்குவது.

O இன விகிதாசார அடிப்படையில் முப்படையிலும் தமிழர்களுக்கு இடமளித்தல்.

இவற்றில் எதனையும் இலங்கையரசு சரிவர நிறைவேற்றவில்லை. இந்தியா அளித்த உறுதிமொழிகளை ஏற்றுத்தான் ஆயுதங்களை ஒப்படைத்துவிட்டு தமிழர் குழுக்கள் ஜனநாயக நீரோட்டத்திற்குத் திரும்பினர். இந்திய இலங்கை உடன்படிக்கையை தமிழ்பேசும் மக்களும் ஏற்றுக் கொண்டனர்.

தமிழ் பேசும் மக்களுக்கும் வடக்கு கிழக்கு மாகாண அரசுக்கும் எதுவித அதிகாரங்களும் வழங்கப்படாத நிலையில் வடக்குக் கிழக்கு தமிழ் மக்களை அனாதரவாக விடமுடியாத சூழ்நிலையும் ஏற்பட்டுள்ளது.

இலங்கை அரசு தனது வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் அனாவசியமான தாமதங்கள் காட்டுவதே திருகோணமலை யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளிலிருந்து இந்திய அமைதிப் படையினர் வெளியேறுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

கிண்ணியா வங்கி மீண்டும் இயங்கும்

(திருமலை)

கிண்ணியாவிலுள்ள இலங்கை வங்கிக் கிளை கடந்த பல வருடங்களாக மூடப்பட்டிருந்தது. அண்மையில் இலங்கை வங்கியின் திருகோணமலை மாவட்ட முகாமையாளர் திரு. எஸ். சுப்பிரமணியத்தால் சம்பிரதாய முறைப்படி திறந்துவைக்கப்பட்டது.

முன்பு சமநலச் சேவைக் கிளையாக கிண்ணியாவில் இயங்கிவந்த இக்கிளை பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டு 84 ம் ஆண்டில் மூடப்பட்டு, திருகோணமலையிலுள்ள கடை வீதிக் கிளையில் இணைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வங்கியில் முழுமையான வங்கிச் சேவையைப் பெற்றுக் கொள்ளமுடியும் எனத் தெரிய வருகிறது.

நிந்தவூர் குடிநீர்ப் பிரச்சினை

(அம்பாறை)

வடக்கு கிழக்கு மாகாண அரசு நிந்தவூர், அரசடித் தோட்டப் பகுதிகளிலுள்ள ஏழை விவசாய, வறிய மக்களின் குடிநீர்ப் பிரச்சனைக்குப் பரிகாரம் காணும் பொருட்டு, குடிநீர் கிணறுகளை அமைப்பதற்கு முயற்சிகள் மேற்கொண்டு வருகிறது.

அம்பாறை மாவட்ட மாகாண சபை உறுப்பினர் அல்ஹாஜ் எம். ரீ. ஹசனலி எடுத்த நடவடிக்கைகள் காரணமாக வடக்கு கிழக்கு மாகாண அரசு எழுபதினாயிரம் ரூபா செலவில் குடிநீர் கிணறுகளை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

இத்தகைய கிணறுகள் அமைக்குமாறு முன்னர் பல தடவைகள் அரசிடம் வேண்டுகோள் விடுத்திருந்தும், ஒருவரும் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதை சுட்டிக் காட்டிய இப்பகுதி மக்கள் இந்தத் தடவை தமது நீர்ப் பிரச்சினை தீர்ந்து விடும் எனவும் தெரிவித்தனர்.

பாலன் அவதரித்த நாள்

சாத்தானின் சாற்று மொழியால்
சரித்திரமே தலை கீழான
ஆதாம் ஏவாள் வம்சத்தை
மீட்டிட மீட்பரொருவர்
தேவனின் அருட்குமாரராகி,
தோன்றிடும் நாளை எண்ணி
தோத்திரம் செய்தே தேவனைத் துதித்திட,
தோன்றிய ஜீவஒளித் திருநாள் இன்று

❁

மண்ணுலக மீட்பராய்
மக்களெல்லாம் மயங்கிடும் வேளை
விண்ணுலக மீட்பராய்
பெத்தலேகம் நகரின்
மாட்டுத் தொழுவத்தில்
அவதரித்தார் பாலன் யேசுபிரான்.

❁

முப்பது ஆண்டுகள்
தலைமறைவு வாழ்க்கையினை மேற்கொண்டு
யோர்தான் நதியில் நீராடி
யோவான் பாதம் பணிந்து,
மலைப்பிரசங்கம் நிகழ்த்திய
மாபெரும் தத்துவஞானி
தோன்றிய நாள் இன்று

❁

கழுதை போலிருந்த மக்களை மீட்க
கழுதையில் வந்து கருத்தினைப் பொழிந்து
சிலுவையில் அறையப்பட்டவர்
கல்லறையில் உயிர்த்த பொழுதே
கடவுளே என்று கதறியழுது.
பாவமன்னிப்பு வேண்டியோர் மனங்குளிர
பாவியர் உள்ளத்தில் உறைந்த
பாலகன் பிறந்த நாள் இன்று.'

–ஜஸ்மின்–

இன்று தபால் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

இன்று நத்தார் தினமாக இருந்தபோதிலும் தபால்விநியோக வேலைகள் வழமை போன்று மேற்கொள்ளப்படும்.

அத்துடன் தபாலகங்களிலும் காலை 10 மணிதொடக்கம் சாதாரண பொதிகள் தபால்கள் என்பன ஒப்படைக்கும் வேலைகளும் செய்வதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இந்நாளில் தந்தி தொலைபேசி வசதிகளும் முத்திரை விநியோகமும் ஞாயிற்றுக் கிழமைபோல் நடைபெறும்.

சாராயம் பதுக்கல்

(யாழ்ப்பாணம்)

கிறிஸ்மஸ், புதுவருடக் கொண்டாட்டங்களை முன்னிட்டு யாழ்ப்பாணப் பகுதிகளில் பரவலாக சாராயத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

சாராயத் தவறணைச் சொந்தக்காரர்கள் கட்டுப்பாட்டு விலைக்கும் மேலால் அதிக விலைக்கு சாராயத்தை விற்கும் நோக்குடன் கையிருப்பிலுள்ளவற்றை பதுக்கி வைத்து

(4ம் பக்கம் பார்க்க)

தவறுகளை சுட்டிக் காட்டும் உரிமை தொழிலாளருக்கு உண்டு

ஆசிரியர், விடுதலை.

சங்கானை தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத்தின் ஊழல்கள், பணக் கொடுப்பனவுகள் தொடர்பாக தங்கள் பத்திரிகையில் வெளியான செய்திகளுக்கு மறுப்பு தெரிவிக்குமுகமாக மேற்படி சங்கத்தின் முன்னாள் தலைவரான திரு. க. நடேசு எழுதிய நீண்ட கடிதத்தைப் பிரசுரித்திருந்தீர்கள். அவர் தலைவராக இருந்த காலத்தில் தொழிலாளர்களின் பணத்தை முறைகேடாகப் துஷ்பிரயோகம் செய்தமையை நியாயப்படுத்துவது போலவே அக்கடிதம் அமைந்திருந்தது.

ஏனைய சங்கங்களில் அக்காலப்பகுதியில் நடைபெற்ற பல கொள்ளைச் சம்பவங்களையும் துணைக்கிழுத்துள்ளது பெரும் ஆச்சரியத்தை அளிக்கின்றது. சங்கானைச் சங்கத்தின் நிர்வாக சபை கூடி பணத்தினை எப்படி பாதுகாப்பது என ஆராய்ந்த பின்னரே தனியார் நிறுவனத்தில் சங்கத்தின் பணத்தை முதலீடு செய்ததாகத் தெரிவிக்கின்றார்.

பொறுப்புள்ள ஒரு சங்கத்தின் தலைவர், நாடுபூராவும் கொள்ளைகள் நிகழ்ந்து கொண்டிருக்கும் சமயத்தில் தனியார் நிறுவனம் பாதுகாப்பானது என எவ்வாறு தெரிவுசெய்தாரோ நாம் அறியோம்.

முன்னைய நிர்வாகத்தினர் மீது குற்றம் சுமத்த வேண்டுமென்ற நோக்கில் தெரிவிக்கப்பட்ட குற்றச் சாட்டுகளே இவையென்பதையே ஒவ்வொரு தொழிலாளர்களும் நன்குணர்ந்து கொள்ள வேண்டும் இப்பணவைப்பு மோசடியான முறையில் நடைபெற்றதாக இருந்தால், தற்போதைய நிர்வாகம் எப்படி மேற்படி தனியார் நிறுவனத்திடமிருந்து சங்கப்பணத்தினைப் பெற்றுக் கொள்வர் என்னும் தோரணையில் எழுதியிருந்தார். சங்கப்பணம் என்றால் மாறி, மாறி எந்த நிர்வாகம் வந்தாலும் அறவிடும் உரிமை அவர்களுக்கு உண்டு. ஏனெனில் அது ஏழைச் சீவல் தொழிலாளர்களின் உழைப்பினால் கிடைத்த பணமாகும்.

நிர்வாகசபை தீர்மானித்துக் கொடுத்திருந்தாலும் கூட இதற்கு கூட்டுறவு இலாக்காவிடமும், சீவல் தொழிலாளர்களிடமும் பிந்தியாவது அனுமதியைப் பெறவேண்டும் அப்படிப் பெற்றார்களா என்பது தான் கேள்வி?

தவறுகளைச் செய்தால் அதனை ஒப்புக்கொள்ளுவது மனிதப் பண்பு, பதிலாக தனது தவறுகளை அதாவது திரு. நடேசு போன்ற அனுபவம் வாய்ந்தவர்கள் ஒருபோதும் தவறுகளை நியாயப்படுத்தக் கூடாது. சீவல் தொழிலாளர்களாகிய நாம் சங்கத்தில் பத்து ரூபாதான் தவறுதலாகப் பிரயோகிக்கப்பட்டாலும், அதனைக் கூட்டிக் கேட்கும் உரிமை எமக்குண்டு என்பதை கூறிக்கொண்டு இக்கடிதத்தை முடிக்கின்றேன்.

சங்கானை. கே. கந்தையா.

யாழ். போதனா வைத்தியசாலையின் மலசல கூடம்

ஆசிரியர், விடுதலை.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் வெளிநோயாளர் பகுதியில் உள்ள மலசலகூடம் ஆண், பெண் இருபாலாருக்கும் பொதுவாகவே இருந்து வருகின்றது. இதனால் மக்கள் பெரும் சிரமத்திற்கு ஆளாவதுடன் பல பிரச்சினைகளுக்கும் இடமளிக்கின்றது.

நீண்ட நேரமாக ஆண், பெண் இருபாலாரும் கியூவில் நிற்கவேண்டியுள்ளது. யாழ்ப்பாணத்தின் பெரிய ஒரு வைத்தியசாலையில் இவ்வாறு மலசல கூடத்திற்காக மக்கள் கியூவில் நிற்பது வெட்கக்கேடானது.

ஆகவே தயவுசெய்து இவ்விடயத்தை வைத்தியசாலை நிர்வாகத்தினரின் கவனத்துக்குக் கொண்டுவந்து, இவ் அமைப்பு முறையே மாற்றி இருபாலினருக்கும் தனித்தனியே மலசல கூடங்களை அமைக்க உதவுமாறு தங்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

யாழ்ப்பாணம். பொதுமக்கள்.

சாவற்காடு கடற் தொழிலாளர் குறைகள் நிவர்த்திக்க வேண்டும்

(யாழ்ப்பாணம்)

"பண்ணைக் கடற் பகுதியில் உள்ள சாவற்கட்டு கிராம மீனவ சமூகங்களிடையே இருல் தொழில் செய்வதற்கு கையாளப்பட்டுவரும் இழுவை மடித்தொழிலினால் இருல்முட்டைகளும் அதன் கருக்களும் அழிந்துபோகின்றன. இதனால் எதிர்காலத்தில் அந்தப் பகுதியில் இத்தொழில் அழிந்து போகும் நிலை ஏற்பட்டுள்ளது. பண்ணைக்குடாக் கடலில் நீரோட்டமில்லாததால் கடலின் அடிப்பாகத்திலுள்ள அழுக்கடைந்த நச்சுப்பொருட்பாசிகளும் கடலின் மேற்பரப்பிற்கு வருவதனால் தொழிலாளர்களுக்கு பலவித நோய்கள் ஏற்படுகின்றன,

இவ்வாறு பண்ணைக் கடற் பகுதியிலுள்ள கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் தொடர்பாக ஈழத் தொழிற்சங்க சம்மேளனம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அறிக்கையில் மேலும் கூறப்படுவதாவது.

"களங்கண்டி மற்றும் சிறகு வலை தொழில்களும் செய்ய முடியாத நிலை உருவாகியுள்ளது. சிறகு வலைத் தொழிலால் அவர்கள் வலைகள்பெருமளவு நாசமாக்கப்பட்டு வருகின்றது. இதுபற்றிக் கடற்

(4ம் பக்கம் பார்க்க)

பனமா அதிபர் நொறீகா தற்கொலை

சண்டையும் அராஜகமும் நீடிக்கிறது

(பொகோட்டா)

கடந்த புதன்று பனமாவுக்குள் படையெடுத்த அமெரிக்க துருப்புக்களினால் பதவியிலிருந்து அகற்றப்பட்ட பனமா அதிபர் ஜெனரல் நொறீகா தற்கொலை செய்து கொண்டதாக கொலம்பியா டெலிவிஷன் அறிவித்துள்ளது.

கோஸ்டாரிக்கா எல்லையை ஒட்டிய மாகாணத்தில் நொறீஸா மறைந்திருந்ததாகவும், அங்கு துப்பாக்கியால் சுட்டுக் கொண்டு தற்கொலை செய்து கொண்டதாகவும் தேசியப் படைவீரர் ஒருவரிடமிருந்து நிருபர் மூலம் அறிந்ததாக அச்செய்தி கூறியது.

இதே வேளை அமெரிக்கப் படைகளுக்கு எதிராக ஜெனரல் நொறீகா ஆதரவுப்படைகள் எதிர்த்தாக்குதல் தொடுத்து வருவதாகவும் செய்திகள் கூறுகின்றன. அமெரிக்க படையின் தலைமையகத்தை நொறீகா ஆதரவுப் படைகள் தாக்கியதாகவும், அமெரிக்க விமானப் படைகள் குண்டு வீசித் தாக்குதல் தொடுத்ததாகவும் கூறப்படுகிறது. பனமாவில் உள்ள தனது படைகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் அமெரிக்கா முடிவு செய்துள்ளதாகத் தெரிய வருகிறது. தற்போது அங்கு 22,500 அமெரிக்க துருப்புகள் உள்ளன.

பனமாவில் நடந்த சண்டையில் வெள்ளி பிற்பகல் வரை 21 அமெரிக்க படையினர் பலியானதாகவும், 221 பேர் காயமடைந்ததாகவும் அமெரிக்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பனமாவில் கடைகள் வீடுகள் எல்லாம் சூறையாடப்படுகின்றன; தெருக்கள் எங்கும் அராஜகம் நீடிக்கிறது. இதற்கிடையில் தங்கள் வீடுகளும் வர்த்தக நிறுவனங்களும் சூறையாடப்படுவதை தடுக்கும் வகையில் கண்காணிப்புக் குழுக்களை மக்கள் அமைந்துள்ளனர்.

நியூசிலாந்தில் சிகரெட் விளம்பரத்திற்குத் தடை

(வெலிங்டன்)

நியூசிலாந்து அரசாங்கம் அடுத்த ஆண்டில் புகையிலை விளம்பரத்திற்கும் அதனோடு தொடர்பான பிரச்சாரங்களுக்கும் தடைவிதித்துள்ளது. சிகரெட் தயாரிப்பு நிறுவனங்கள் இதற்கு ஆட்சேபனை தெரிவித்திருக்கின்றன.

நியூசிலாந்தில் நோய்களுக்கும் இளம் வயதில் மரணம் ஏற்படுவதற்கும் புகைபிடித்தல் பழக்கமும் முக்கிய காரணிகளில் ஒன்றாய் இருக்கிறதென்று அந்நாட்டின் சுகாதார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலிய அரசாங்கமும் இதுபோன்ற ஒருமுடிவை எடுத்திருக்கிறது. தொலைக்காட்சியிலும் வானொலியிலும் ஏற்கனவே தடைவிதிக்கப்பட்ட போதிலும் சஞ்சிகைகளிலும் மைதானங்களிலும் இது தொடர்பானவிளம்பரங்கள் காணப்படுகின்றன.

இந்தத் தடை பெரும்பாலும் சிகரெட் கம்பனிகளில் ஆதரவில் தங்கியிருக்கும் விளையாட்டுப் போட்டிகளைப் பாதிக்கும் என்று புகையிலை தொழிற்துறை பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.



எம். ஜி. ஆர். 2-ம் வருட நினைவு

தமிழகம் எங்கும் அஞ்சலி!

(சென்னை)

மறைந்த தமிழக முதல்வர், எம். ஜி. ராமச்சந்திரனின் இரண்டாம் ஆண்டு நினைவு நாளையொட்டி நேற்று தமிழகம் எங்கும் அஞ்சலி நிகழ்ச்சிகளும் அன்னதானங்களும் நடைபெற்றன.

தமிழக முதல்வர் கருணாநிதி நேற்றுக்காலை 7.30மணியளவில் சென்னை மெரீனா கடற்கரையில் உள்ள எம் ஜி ஆர். நினைவு இடத்திற்குச் சென்று மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர். அவருடன் அமைச்சரவைச் சகாக்களும் உடன்சென்று மலர் அஞ்சலி செலுத்தினர்கள்.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் சென்னையில் பிரமாண்டமான மௌன ஊர்வலம் நடைபெற்றது. பல்வேறு பகுதிகளிலும் அ. தி. மு. க. தலைவர்கள் ஏழைகளுக்கு அன்னதானம் வழங்கினர்.

மௌன ஊர்வலத்தில் அ. தி. மு. க பொதுச் செயலாளர் ஜெயலலிதா மற்றும் அக்கட்சித் தலைவர்கள் பலரும் கலந்து கொண்டனர். நேற்றுக் காலை 8 மணிக்கு அண்ணா சாலை பெரியார் சிலையிலிருந்து புறப்பட்ட ஊர்வலம், கடற்கரை எம். ஜி. ஆர். சமாதியில் முடிவடைந்தது. சமாதிக்கு பலரும் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

யானைகளைப் பாதுகாக்கும் செயற்கைக் கோள்கள்

(லண்டன்)

ஆபிரிக்காவில் கென்யா நாட்டின் காடுகளில் உள்ள யானைக் கூட்டங்கள் ஒவ்வொன்றும் எங்கு நடமாடுகிறது என்று கண்காணிக்கப்படும். இதற்கு செயற்கைக் கோள் பயன்படுத்தப்படும்.

ஆபிரிக்காவில் யானைகள் அவற்றின் தந்தத்துக்காகக் கொல்லப்படுவதன் காரணமாக அவற்றைப் பாதுகாக்க இவ்வித திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டப்படி இந்த யானைகளின் கழுத்தில் சிறிய ட்ரான்ஸ் மீற்றர் கருவிகள் தொங்கும். இவை தொடர்ந்து சமிக்கைகளை வெளிப்படுத்திக் கொண்டிருக்கும். செயற்கைக்கோள் இந்த சமிக்ஞைகளைப் பெறும்.செயற்கைக்கோள் இந்த சமிக்ஞைகளைப் பூமியை நோக்கி அனுப்பும், பிரான்சின் தென் பகுதியில் தூஸௌஸ் நகரில் உள்ள கருவிகள் இந்த சமிக்ஞைகளைப் பெற்று, லண்டன் மிருகக் காட்சிச்சாலையில் உள்ள யானைகள் நல இல்லத்துக்கு அனுப்பும். அங்கு ஒரு கட்டத்தில் கென்யாவின் காடுகளைக் காட்டுகின்ற பெரிய திரைப்படத்தில் (Map) யானைகளின் நடமாட்டம் பல நிறங்களில் ஒளிகளை வெளியிடுகிற கோடுகளாகத் தெரியும். இப்படத்தைக் கொண்டு யானைக்கூட்டங்கள் எங்கு நடமாடுகின்றன என்பதை அறியமுடியும்.

ஆபிரிக்க யானைகளுக்காக இங்கிலாந்து ஆர்வலர்கள் மேற்கொண்ட முயற்சியின் பேரில் லண்டன் வனவிலங்கு மன்றம் இந்த மூன்றாண்டுத் திட்டத்தை மேற்கொண்டுள்ளது. இத்திட்டத்தை அமுலாக்க 1·8 லட்சம் பவுண்ட் செலவாகும். யானைகளைக் காக்க கென்ய அரசாங்கத்திற்கு உதவுவதற்காக இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

லண்டன் உயிரியல் பூங்காவின் விலங்குப் பாதுகாப்பு அதிகாரி அலெக்சாண்ட்ரா டிக்ஸன் கூறுகையில் யானைகள் நிறையக் கொல்லப்பட்டு வந்துள்ளதன் காரணமாக கென்யாவில் யானைகளின் எண்ணிக்கை 90 சதவீதம் குறைந்து இப்போது 11,000 யானைகளே மிஞ்சியுள்ளன என்றார், கென்யாவின் ட்சாவோ தேசியப்பூங்காவில் 1981ல் 41,000 யானைகள் இருந்தன. இப்போது 4,000 யானைகளே உள்ளன.

செயற்கைக் கோள் உதவியுடனான யானைப் பாதுகாப்புத் திட்டம் மத்திய கென்யாவில் கூகியியா பீடபூமிப் பகுதியில் மேற்கொள்ளப்படும்.

அங்கு 2,000 யானைகள் உள்ளன.

லண்டன் உயிரியல் பூங்காவின் துணை அமைப்பான விப்ஸ்னேடே வனவிலங்குப் பூங்காவில் உள்ள யானை ஒன்றுற்கு இப்போது பரீட்சார்த்தமாகட்ரான்ஸ்மீற்றர் கருவி பொருத்தப்பட்டுள்ளது. இவ்வித ட்ரான்ஸ்மீற்றர் கருவிகள் பற்றறியால் இயங்குபவை.

உத்தேச திட்டப்படி யானைகளின் கழுத்தில் தொங்கவிடப்படும் கருவியின் எடை சுமார் 12 இருத்தல் இருக்கும்.

இணைப்புக்கு கிழக்கு ஜெர்மன் மக்கள் எதிர்ப்பு

(பொன்)

கிழக்கு ஜெர்மனையும் மேற்கு ஜெர்மனையும் ஒரே ஜெர்மனாக இணைக்கப்படவேண்டுமா என்பது பற்றி கிழக்கு ஜெர்மனில் நடத்தப்பட்ட கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பு முடிவு இணைப்பை எதிர்க்கிறது

கிழக்கு ஜெர்மன் மக்களிடம் மேற்கு ஜெர்மன் நிறுவனம் ஒன்று மேற்கொண்ட கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பு ஆய்வின் முடிவில் இதைத் தெரிவித்துள்ளனர். கிழக்கு ஜெர்மன் முழு ஆட்சி உரிமை பெற்ற தனிநாடாக இருப்பதையே தாங்கள் விரும்புவதாக வாக்கெடுப்பில் கலந்து கொண்ட 70 சதவீதம் கி. ஜெர்மன் மக்கள் கூறியுள்ளனர்,

கவிதையின் ஸூம்லென்ஸ் 'ஹைகூ'

— சுஜாதா —

"திருடன்
மொட்டைமாடியில் மறைகிறான் ...
இரவின் குளிர்..,'

இந்தக்கவிதையை நீங்கள் யோசித்துப்பார்த்தீர்களோ ? அது உங்கள் மனத்தில் எந்த வடிவத்தை ஏற்படுத்தியது...? பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த புஸோன் (Buson)என்கிற ஜப்பானிய கவிஞரின் ஹைகூ இது. சற்றே உன்னிப்பாகப் பார்க்கலாம்.

மொட்டைமாடியில் ராத்திரி திருடன் வரும் சத்தம் கேட்டு விழித்து எல்லோரும் போய்ப் பார்க்கிறார்கள். அவன் ஓடிப்போய்விடுகிறான். திருடனைப் பார்த்த ஆச்சரியம் கலைந்ததும்தான் இரவின் குளிர்காற்று சில்லென்று உறைக்கிறது, மஃப்ளர் போட்டுக்கொள்ளாமல் ஸ்வெட்டர் அணியாமல் வந்திருக்கிறார்கள்!

ஐந்து வார்த்தைகள்தான்... எத்தனை நினைவுகளை எழுப்புகிறது. பாருங்கள் கவிதை...

ஹைகூவின் அமைப்பைப்பற்றிச் சொல்லுமுன் இன்னமும் மூன்று ஹைகூ கொடுக்கிறேன். இவை எப்படி உங்களைப் பாதிக்கின்றன என்று அனுபவித்துப் பாருங்கள்.

"பார்க்கின் அமைதி...
ஒரு வெண்கல பீரங்கி
காதலர்களை நோக்கி..."

0 0 0

"சின்ன வெண்மையான கோயிலைச்
சுற்றிச் சுற்றித் துரத்துகிறான்
பையன் தன் தங்கையை..."

0 0 0

"பல்வைத்தியம்
பண்ணிக் கொள்கையில்
என் நாக்கில் சூரியன்..."

மூன்று வரிகளில் ஒரு சின்னப் பூப்போல் கவிதைகள். உலகின் அத்தனை இலக்கியத்திலும் இந்த ஹைகூ வடிவம் இடம் பிடித்து எழுதப்படுகின்றன. 'ஹைகூகிளப்'கள் அமைத்து அடிக்கடி வாசித்துக் காட்டுகிறார்கள். ஹைகூவுக்கென்றே பத்திரிகைகள் இருக்கின்றன. தமிழிலும் பலர் ஹைகூ எழுத முயற்சித்திருக்கிறார்கள். இத்தனை பிரசித்தமான இந்தக் கவிதை வடிவத்தின் ஆதார சங்கதியைப் பிடித்துப் பார்க்கலாம்.

ஹைகூ என்பது ஜப்பானியக் கவிதையின் புராதன வடிவங்களில் ஒன்று. 'ரெங்கா' என்னும் நீண்ட பாடலுக்கு முன்னுரைகளாக முதல் ஹைகூ மாட்ஸுவோ போஷோ என்பவரால் எழுதப்பட்டது. அவருடைய

'பழைய குளம்
தவளை குதிக்க
ஜலத்தில் சத்தம்'

என்னும் ஹைகூ ஜப்பானிய மொழியிலேயே ஏன் உலகிலேயே மிகப் பிரசித்தமானது.

ஜப்பானிய மொழிக் கவிதைகள் நம் தமிழில் போல சீர் அடி அளவுகள் இல்லை. அவர்கள் ஒவ்வொரு ஒலியையும் ஒவ்வொரு எழுத்தாக வடிக்கிறார்கள் பட எழுத்துகளாக அவற்றை 'ஒன்ஜி' என்கிறார்கள். தமிழில் இதற்கு மிக அருகே ஈடாகச் சொல்லக் கூடியது அசை என்பதே. அதிலும் நேர் அசை என்கிறார்களே அது ஹைகூவின் ஒன்ஜிக்கு பொருந்தி வருகிறது.

புரிந்துகொள்ள ஒரு ஹைகூவை ஜப்பானிய வடிவத்திலேயே பார்ப்போம்.
போஷோவின் தவளையை எடுத்துக் கொள்வோம்:-

" ஃபுரு இகே யா
கவாஸு தாபிகோமு
மீஜு நோ ஓடோ..."

என்பது தான் அதன் ஒரிஜினல். ஜப்பானிய எழுத்துக்களில் ஹைகூவின் வடிவமும் தந்திருக்கிறது. இதன் ஓசையைப் பார்த்தால் அனைத்தும் நேர் அசை சீர்களாக இருப்பது புரியும்.

நேர் அசை என்பது என்ன என்று தெரியாதவர்கள் அண்மையில் உள்ள தமிழாசிரியர்களிடம் கேட்டுக் கொள்ளவும். பாடலை ஓசை வடிவப்படுத்தினால் ஐந்து ஏழு ஐந்து ஒற்றை ஒலிகளாக வடிவில் இருப்பது புரியும். இதுதான் ஹைகூவின் வடிவு, (ஃபு, ரு, இ, கே, யா என்று தனித்தனியான ஒலிகளாக வரிகளைப் பிரிக்க வேண்டும்!) வரி என்பது கூடச் சரியல்ல.

ஒவ்வோர் எழுத்தையும் ஒரு கலைப்படைப்பைப் போல அழகாக எழுதுகிறார்கள். ஒவ்வொன்றும் ஒரு ஒலிக்குறிப்பு. பதினேழு ஒலி வடிவங்கள் கொண்டதை மூன்று வரிகளாகப் பிரிப்பது நம் சௌகரியத்துக்காகத்தான். ஜப்பானிய வடிவத்தில் ஒரு ஹைகூ கவிதை பதினேழு ஒலிகளைக் கொண்டு சுமார் பன்னிரண்டாவது ஒலிக்குறிப்பில் 'கிரேஜி' என்கிற கருத்தில் ஒரு திருப்பம் தருகிறது. மேலும் சம்பிரதாய ஹைகூவில் பருவகாலக் குறிப்பு ஒன்று இருக்கும் இதை 'கிகோ' என்கிறார்கள்.

சம்பிரதாய வடிவத்திலிருந்து ஹைகூவில் பல மாறுதல்கள் வந்துவிட்டன. இருந்தும் அளவில் சிறியதாக இருப்பதும், சுமார் பதினேழு ஒலிக்குறிப்புகள் கொண்டதும். ஒரு கருத்தைச் சொல்லிச் சொல்லிச் சட்டென்று திருப்புவதும் ஹைகூவின் பொது அம்சங்கள் என்று சொல்லலாம்.

(தொடர்ச்சி: நாளை)

விடுதலை

இலங்கையின் இராஜதந்திரமற்ற அணுகு முறைகள்

தமிழ் பேசும் மக்களின் உரிமைப் போராட்டமும், தவிர்க்க முடியாத இந்திய அரசின் தலையீடும்; ஸ்ரீலங்கா அரசுக்கும் — இந்திய மத்திய அரசுக்குமிடையேயான உடன்படிக்கைகளும், உடன்படிக்கைகளின் இழுபாடு நிலைகளும் கடந்த ஐந்தாண்டுகளுக்கும் மேலாக தொடர்ந்த வண்ணமாகவே இருக்கின்றது.

இப் பேச்சுவார்த்தைகளின்போது ஸ்ரீலங்கா அரசானது எப்போதும் இந்திய அரசுடன் ஒரு முரண்பட்ட போக்கையும், திமிரான பேச்சுவார்தைகளையுமே கடைப்பிடித்து வந்துள்ளது, முந்திய பிரதமர் ராஜீவ் காந்தி தலைமையிலான மத்திய அரசுடன் இத்தகைய கடினமான போக்கையே ஸ்ரீலங்கா அரசு கொண்டிருந்தது. ஆனால் தற்போதுள்ள புதிய மத்திய அரசாங்கத்துடனும், அதேபோன்ற போக்கையே ஸ்ரீலங்கா அரசு கடைப்பிடித்து வருவதை நன்கு அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

ஸ்ரீலங்கா அரசின் வேண்டுகோளிற் கிணங்க இந்திய அமைதிப் படையினர் எத்தகைய நிபந்தனைகளுமின்றி யுத்த நிறுத்தத்தைக் கடைப்பிடித்து, இங்கிருந்து படிப்படியாக வெளியேறிக் கொண்டிருக்கும் இக்கால கட்டத்தில், இந்நாட்டின் வெளிவிவகார, இராஜாங்க அமைச்சரும், பிரதமரின் நம்பிக்கைக்குரிய சகாவுமான திரு. இரஞ்சன் விஜயரத்தினு, மீண்டும் இந்திய அரசின் மீதும், இந்திய உயர் அதிகாரிகள் மீதும் சீறி விழுந்துள்ளார். பொறுப்புள்ள அமைச்சர் என்பதையும் மறந்து, இராஜதந்திரமற்ற முறையில் பிரச்சினையைக் கையாண்டுள்ளார்.

கடந்த காலத்தில் ஸ்ரீலங்காவிலும் - இந்தியாவிலும் அரசாங்கம் மாறுவதற்கு முன்னர் எப்படி பரஸ்பரம் புரிந்துணர்வற்ற நிலையில் காரசாரமான பேச்சுக்களும், மறுப்புகளும் நடைபெற்றனவோ அத்தகைய ஒரு சூழ்நிலை இன்று மீண்டும் காணப்படுகின்றது. இந்த நிலை இரு நாடுகள் மத்தியிலும் மேலும், மேலும் விரிசல்களை அதிகரிக்கவே உதவும்.

பாதுகாப்பு வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் திரு. ரஞ்சன் விஜயரத்னு அண்மையில் இலங்கைப் பிரச்சினை தொடர்பாக இந்திய உயர்மட்ட அதிகாரிகளுடன் தாம் பேசப்போவதில்லை எனவும், இந்திய அமைதிப் படையினர் டிசம்பர் மாதத்துடன் விலகுவதை, இந்த அதிகாரிகளே தாமதப்படுத்துகின்றனர் எனவும் கூறியிருப்பதானது வெறும் வாய்ச்சவடாலே சொல்லவேண்டியுள்ளது. இத்தகைய பொறுப்பும் இராஜதந்திரமுமற்ற பேச்சுக்களால் நிலைமை மேலும் மோசமடையவே செய்யும் என்பதை மீண்டும் சுட்டிக் காட்ட வேண்டியுள்ளது. இத்தகைய சந்தர்ப்பங்களில் அவசரப்பட்டு வார்த்தைகளை கொட்டித் தெளிப்பது பொறுப்புள்ள அமைச்சருக்கு அழகல்ல. கட்டுமீறிய, உணர்ச்சிவசப்பட்ட வார்த்தைப் பிரயோகங்களின் மூலம் இந்தியாவையும், இந்திய மக்களையும் ஆத்திரமுறுவது இலங்கை போன்ற ஒரு அயல் நாடிற்கு எவ்வகையிலும் உதவ முடியாது.

அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளையும், அவர்களின் உளவாளிகளான சி. ஐ. ஏ. யையும், இஸ்ரேலிய மொசாட் கும்பலையும், அவர்கள் வழங்கும் ஆலோசனைகளையும் ஜீரணித்துவிட்டு அவர்களின் திருப்திக்காக கச்சை கட்ட முயலுவது குழந்தைப்பிள்ளைத் தனமானதாகும்.

இந்தியாவில் நடந்து முடிந்த பொதுத் தேர்தலைத்தொடர்ந்து புதிதாக அமைக்கப்பட்ட மத்திய அரசுடன் அது முந்திய பிரதமர் ராஜீவ்காந்தியின் அரசுக்கெதிரானது என்ற ஒரே காரணத்தால் விழுந்தடித்துச் சென்று பேச்சுவார்த்தை நடத்தினார். திரு. இரஞ்சன் விஜயரத்தினு இவரது அணுகுமுறை இந்திய அமைச்சர்களையும் அதிகாரிகளையும் சந்தேகம் கொள்ள வைத்துள்ளது. வழமைபோன்று பிரச்சினைகளுக்கு உண்மையிலேயே தீர்வுகாணும் நோக்கின்றி தமிழ் மக்களை அழித்தொழிக்கும் அல்லது உரிமைகளை மறுக்கும் முந்திய போக்கைக் கடைப்பிடித்துக்கொண்டு இந்திய அமைதிப்படையினரை வெளியேற்ற இலங்கை அரசு மேற்கொள்ளும் கபட்த்தனமான இராஜதந்திர அணுகுமுறைகளே இவை என்பது இந்திய மக்களுக்கும், தமிழ் பேசும் மக்களுக்கும் நன்கு தெரியும்.

இலங்கை அரசு தமிழ் மக்களை மீண்டும் அழித் தொழிப்பதற்கு தமிழ் பேசும் மக்கள் மத்தியிலிருந்து புல்லுருவிகளை விலைக்கு வாங்கிவிட்ட இறுமாப்பில் இந்திய அரசைப் பகைப்பதும் அதே சமயம் வடக்கு கிழக்கு மாகாண அரசுடன் நிதானமற்ற அணுகுமுறையைக் கடைப்பிடித்து, சகலரையும் பகைவர்களாக்கிக் கொள்வது இலங்கைக்கு உகந்ததல்ல என்பதுடன் தமிழ் பேசும் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கான தீர்வின் மூலமாகவே இந்தியாவுடனான உறவையும் சீர்செய்துகொள்ள முடியுமென்பதை விடுதலை சுட்டிக்காட்ட விரும்புகிறது.

வவுனியா தபால் பெருமளவு

(வவுனியா)

வவுனியா தபால் நிலையக் கட்டடம், தொலை தொடர்பு நிலையம் ஆகியவற்றை மறு சீரமைத்து விஸ்தரிக்கும் பொருட்டு வடக்கு கிழக்கு

சாராயம்

(2ம் பக்கத் தொடர்ச்சி)

விட்டு, சிறு வியாபாரிகளுக்கும், வாடிக்கையாளருக்கும் அதிக விலைக்கு விற்பனை செய்து வருவதாகவும் தெரிய வருகின்றது.

இப்பதுக்களால், கசிப்பு பெருமளவில் விற்பனைக்கு வந்துள்ளதாகத் தெரியவருகிறது

திணைக்களத்திற்கு நிதி ஒதுக்கீடு

மாகாண அரசு, புனர்வாழ்வு அமைச்சின் ஊடாக 2 லட்சத்து 98 ஆயிரம் ரூபாவை ஒதுக்கியுள்ளதாக வவுனியா மாவட்ட அரசியல் இணைப்பாளர் திரு. ப. பராபரன் தெரிவித்தார்.

இந்நிதியைப் பயன் படுத்தி வவுனியா தபாலகம், மாவட்ட தபால் துறை சுப்பிரீண்டன் அலுவலகம், விடுதி மற்றும் தொலை தொடர்பு இணைக்கள விடுதி, பெரிய தமபனை உப தபால் அலுவலகக் கட்டிடம் என்பன புனர் அமைக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

குருநகர் பகுதியில் விரைவில்

காணி மறுசீரமைப்பு

(குருநகர்)

குருநகர் தொடர்மாடிக் கட்டிடத்திற்கு முன் உள்ள மைதானம் மறுசீரமைக்கப்படுவதாகத் தெரிகிறது. செம்மண் பறிக்கப்பட்டு பரப்பப்படுகின்றது. வட—கிழக்கு மாகாண அரசின் அரசியல் இணைப்பாளரினால் இம் மைதானத்தின் திருத்த வேலைகளுக்காகப் பணம் ஒதுக்கப்பட்டதாகத் தெரிகிறது. அடுத்த வருடம் பெப்ரவரி மாதத்திற்கு முன்னதாக திருத்தப் பணிகள் முடிவடையும் எனவும், அதைத் தொடர்ந்து விளையாட்டுப் போட்டி அம் மைதானத்தில் நடைபெறும் எனவும் அறியக்கூடியதாகவுள்ளது.

குருநகர் தொடர்மாடிக்கு அருகாமையிலும், கடற்கரை ஓரமாக வீட்டுத் திட்டம் ஒன்றும் அமைக்கப்படுகிறது. குப்பைகள் கொட்டப்பட்டுக் கிடக்கும் கடற்கரையை ஆண்டிய பகுதிகளில் மண் கொட்டப்பட்டு பள்ளங்கள் நிரப்பப்படுகின்றன.

சீரமைக்கப்படும் இக் காணிப் பகுதிகள், காணி அற்றவர்களுக்கு அடுத்த ஆண்டுக்குள் பகிர்ந்தளிக்கப்படவுள்ளதாகவும் தெரிய வந்தது வீடுகளைக் கட்ட முடியாத ஏழை மக்களுக்கு அடிப்படை உபகரணங்கள் வழங்க மாகாண அரசு அதிகாரிகள் நடவடிக்கைகள் எடுக்க இருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இளைஞர்கள் தொடர்பான ஜனதிபதி ஆணைக்குழு யாழ்ப்பாணத்தில் விசாரணை

(யாழ்ப்பாணம்)

இளைஞர்கள் தொடர்பான ஜனதிபதியின் ஆணைக்குழு, யாழ்ப்பாணத்திலான தனது அமர்வை முடித்துக்கொண்டு நேற்றுக்காலை கொழும்பு திரும்பியது.

வடக்குக் கிழக்கு மாகாண ஆளுனர் லெப்டினன் நளின் செனிவிரத்தினு யாழ். பல்கலைக் கழக மாணவர்கள், பேராசிரியர்கள் யாழ் மேற்றிராணியார் வண. தியோகுப்பிள்ளை முதலானோர் ஆணைக்குழு முன் னிலையில் சாட்சியமளித்தனர்.

யாழ். கச்சேரியில் இப்பகிரங்க விசாரணைகள் நடைபெற்றன. இவ் ஆணைக்குழு ஏற்கனவே கொழும்பு, கண்டி மாத்தளை தெல்தெனியா, காலி ஆகிய இடங்களிலும் விசாரணைகளை முடித்துள்ளது. தொடர்ந்து விசாரணைகள் வடமத்திய மற்றும் வட மேல் மாகாணங்களில் நடைபெறவுள்ளன. இவ்விசாரணைகளை மூன்று மாதகாலத்தில் முடித்துக் கொள்ளுமாறு ஜனதிபதி பணித்துள்ளார்.

டிசம்பருக்குள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

எனத் தெரிகிறது.

ஈழத் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள், அவர்களின் பாதுகாப்பு என்பது குறித்தும் இந்தியா தனது பதிலில் வலியுறுத்தும்.

இலங்கைப் பிரச்சனையில் தமிழக முதல்வர் கருணாநிதி 'தனது பணி முடிந்துவிட்டது' எனக் கூறியிருந்தார். எனினும், அப்படி ஒதுங்கிக் கொள்ள மத்திய அரசு விட்டுவிடும் என்கிறதோன்றவில்லை.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி முதலான அமைப்புகளுடனும் பேசி இப் பிரச்சினையில் கருணாநிதி, தனது பணியை விரிவாகச் செய்ய வேண்டும் என் வெளிவிவகாரத்துறை எதிர்பார்ப்பதாகவும் அந்த வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகிறது.

சாவற்காடு..

(2ம் பக்கத் தொடர்ச்சி)

ருழில் அதிகாரிகளுக்கும் உத்தியோகத்தர்களுக்கும் தெரிவித்திருந்தும் அவர்கள் எத்தகைய நடவடிக்கைகளும் எடுக்கவில்லை.

இந்தச் சூழ்நிலையில் அப் பகுதித் தொழிலாளர்கள் மத்தியில் குரோத உணர்வுகள் மேலோங்கிவருகின்றது.

ஆகவே கடல் வளத்தைப் பாதுகாத்து வளர்த்தெடுக்க வேண்டியவர்களே மௌனமாக இருப்பது எதிர்காலத்துக் குகந்ததல்ல, உடனடியாக இவ்விடையத்தில் தலையிட்டு, கடற்தொழிலாளர்களின் கஸ்டங்களை நிவர்த்திக்க முன்வர வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

புகையிரதம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தனர்.

பயணிகள் அணிந்த நகைகள், பிரயாணத்திற்கென வைத்திருந்த பணம் முதலானவையும் பறிமுதலாகின. இவற்றைப் பறிகொடுத்த பயணிகள் பிரயாணத்தைத் தொடர முடியாத நிலையில் செட்டிகுளம் புகையிரத நிலையத்தில் குழுமியிருக்கக் காணப்பட்டனர்.

மட்டக்களப்பு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சிகிச்சை அளிப்பதற்காக மட்டக்களப்பு ஆஸ்பத்திரியிலிருந்து இரண்டு டாக்டர்களை ஆயுத முனையில் கடத்திச் சென்றுள்ளனர். சிறீலங்கா விமானப்படை மருத்துவர்களும் காயமடைந்த புலிகளுக்கு வைத்தியம் செய்து வருவதாக விமானப்படை ஊழியர்கள் தெரிவித்தனர்.

இதற்கிடையில், மட்டக்களப்பில் நெருக்கடிக்குள்ளாகியிருக்கும் புலிகளுக்கு உதவுவதற்காக, முல்லைத்தீவிலிருந்து மேலும் 50 இயக்கத் தவர்களை இலங்கை விமானப் படை விமானம் ஆயுதங்கள் சகிதம் மட்டக்களப்பிற்கு ஏற்றிவந்துள்ளது, புலிகளுக்கு இந்த உதவியைச் செய்வதற்காக சிறீலங்கா அமைச்சர் ஒருவரும் முல்லைத்தீவு சென்று விமானப்படை அதிகாரிகளுடன் பேசி விஷயத்தை முடித்ததாகத் தெரிகிறது.

இலங்கையின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றாக இலங்கை மனித நாகரீகத்திற்கே கொள்ளி வைத்திருக்கிறது. கடந்த சில மாதங்களாக சிறீலங்கா இராணுவப் படையும், விசேட அதிரடிப்படையும் சிங்கள கிளர்ச்சியாளரை அடக்குவதாகக் கூறிக்கொண்டு சட்ட விரோதமாக 25ஆயிரத்திற்கு மேற்பட்ட இளைஞர்களைக் கொன்று குவித்திருப்பதையும், திரு. பிரேமதாசா பாதுகாப்பு அமைச்சராக இருந்துகொண்டு அதைத் தடுக்க முடியாமற் போனதையும் தமிழ் தேசிய சபை வன்மையாகக் கண்டிக்கிறது,

பிரேமதாசாவினுடைய இயலாமையும், அரசியல் தீர்க்கதரிசனம் இல்லாமையும், இலங்கையின் சமூக வாழ்விலும் அதன் வளர்ச்சியிலும் பாரிய அளவிலான கெடுபிடி நிலைமையை உருவாக்கியது. புலிகளுடனான அவரது அரசியல் பச்சோந்தித்தன அணுகுமுறையைக் கண்டித்திருக்கும் தமிழ் தேசிய சபை, தனது அறிக்கையில் பிரேமதாசா ராஜினாமா செய்ய வேண்டும் எனவும், ஒரு புதிய தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்றம் நாட்டைச் சீரமைக்க வேண்டும் எனவும் கேட்டுள்ளது.

ஆட்கடத்தலும்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கைகளைக் காணக் கூடியதாக உள்ளது.

ஆட்களைக் கடத்துவதும், அவர்களை விடுவிப்பதற்காக பணயப்பணம் கேட்பதையும் பரந்த அளவில் செய்து பல கோடிக்கணக்கான ரூபாய்களைச் சேர்த்து வருகிறது இக் கும்பல். வியாபாரிகளிடம் மொத்த தொகையையும், வாகன சொந்தக்காரர்களிடம் அதற்கேற்ற வரிகளையும் இவர்கள் பலவந்தமாக அறவிடுகின்றனர். உத்தியோகம் பார்க்கும் ஒருவருக்கு ரூபா 25 ஆயிரம் வீதம் கப்பம் கேட்கிறார்கள். மரத்தால் விழுந்த வலை மாடு மிதித்தது போன்ற நிலைமையில் மக்கள் பரிதவிக்கிறார்கள்.

தமிழ் தேசிய சபையினதும், சமூகங்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினதும் ஆதரவாளர்கள் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டிருப்பதாக திருகோணமலையிலுள்ள சமூகங்கள் செய்தி நிறுவனம் தெரிவிக்கிறது.

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் இல 6, மகாத்மா காந்தி வீதி நவயுக வெளியீட்டு நிறுவனத்தாரால் மேற்படி முகவரியில் உள்ள விடுதலை அச்சகத்தில் அச்சிடப்பட்டு 25-12-1989 இல் வெளியிடப்பட்டது.

தொலைபேசி 291